முருகப்பெருமான் துணை

இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக கைப்பட எழுதிய நூலாகும்

இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 667**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

27.07.2021, செவ்வாய்கிழமை

1. ஞானக்கடலே அரங்கா போற்றி
ஞானியர்கள் பலம் கொண்ட தேசிகா போற்றி
தானதர்மத்தை உலகமெங்கும் பரப்பி
தவசித்தியாக அருளும் குருராஜனே போற்றி
2. போற்றியே சுப்ரமணியர் யானும் இனிதே
புகலுவேன் அரங்கனுக்கு ஞான அறிவுரை ஆசி
ஆற்றல்பட அரங்கனுள் யானிருக்க
அரங்கன் அருள்ஞான வழி தொடரும் மக்களுக்கு
3. மக்களுக்கு அரங்கன்வழி **என் காட்சி**
மண்ணுலகில் உண்டு உண்டு என்பேன்
தேக்கமின்றி அரங்கன் தர்மத்தை செய்யும் மக்களுக்கு
தேசிகன் வடிவில் ஆறுமுகன் **என் காட்சி கிட்டும்** என்பேன்
4. என்கவே அரங்கனை தொடர்ந்து
இந்தகலியுகத்தில் ஓங்காரக்குடில்நோக்கி ஓங்காரஓசைபட
இனிதே நாமஜெபங்கள் எழுப்பி
உயர்வாக சரவணச்சுடரேற்றி வருக
5. வருகின்ற மக்களுக்கு வடிவேலன்
வல்லமையான என் **ஞானகாட்சி உறுதிஉறுதி**
தருகின்ற அரங்கன் தர்மத்தின் பலத்தாலே
தரணியோர்க்கு ஆறுமுகன்என் தயவும் ஆசியும் உறுதி உறுதி
6. உறுதி தந்தேன் இவை நன்னாளில் அரங்கன் வழி
உலகோர்க்கு ஆறுமுகன் **என் காட்சியும் ஆசியும்**
பெருமைபட பாதுகாப்புக்குரிய வண்ணம்
பிசகில்லா சடுதி வந்தடையும்
7. அடையவே ஓங்காரக்குடில் நோக்கி
அனைவரும் வருகவருக என்று
தடையற அரங்கன் தர்மத்தில்
தாராள பொருளுதவி தருக தருக என்றும்
8. என்றுமே சுப்ரமணியப்பெருமான் யானும்
இனிதே அரங்கன் வழி ஞானயுகம் படைக்க
நன்மைபட அருளாசி தருகின்றேன்
ஞானவான் கரம்பட தீட்சை பெற்றவர்க்கு

**9. பெற்றவர்க்கு நேரிடை என் அருளாசி**
**பிசகில்லா சித்திக்கும் ஆறுமுகன் என்வாக்கு**
**உற்றதொரு ஞானமாக தர்மமாக**
**உலகோர்க்கு மானிட வடிவில் வந்தருளுகின்ற**

**10. அருளுகின்ற மாதவசியின் வடிவே என்ரூபம்**
**மக்களே ஏற்று உணர்ந்து தொடர்ந்துவர**
**தேக்கமின்றி அரங்கன்வழி ஞானம்தேறி**
**தேசிகன்தேடும் ஞானியர்களாகி இந்தஉலகமாற்றத்தில் இடம்பெறுவர்**
**ஞான அறிவுரை ஆசி முற்றே**

–சுபம்–

முருகப்பெருமானை கண்டு தரிசிக்க விரும்புகின்றவர்கள் உயிர்கொலை தவிர்த்தும் புலால் மறுத்தும் சுத்தசைவ உணவினை மேற்கொண்டும் காலை 7.00 மணிக்குள் ஒரு தீபம் ஏற்றி **ஓம் சரவண ஜோதியே நமோ நம** என்ற மகா மந்திரத்தை குறைந்தது 12 முறை யேனும் சொல்லியும் **ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி** என்று 12 முறையேனும் சொல்லியும் பூஜைசெய்வதுடன் வாரம் ஒருவருக்கோ அல்லது இருவருக்கேனும் அவசியம் அன்னதானம் செய்தும் வந்தால் முருகப்பெருமானை தரிசிக்கலாம்.